# வெற்றிடங்கள்

## தேசிய கல்வி நிறுவகம்

தகைமைவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து பணிப்பாளர் (ஆங்கில மொழி) பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2025-08-04ஆம் திகதி அல்லது அதற்கு முன் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம், த.பெ. இல. 21, மஹரகம எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் தயவுசெய்து பதிவுத் தபாலில் அனுப்பவும். பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் மேலதிக விபரங்களை www.nie.ac.lk இணையதளத்தில் “News & Events” பிரிவிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**பொதுவான நிபந்தனைகள்**

- இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
- நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் மற்றும் பதவிக்குரித்தான கடமைகளைச் செய்வதற்கான உள மற்றும் உடல் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.
- பிறப்புச் சான்றிதழ், கல்வி/ தொழில்சார் சான்றிதழ்கள், அனுபவச் சான்றிதழ்கள் மற்றும் சேவைச் சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகளுடன் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- அரச துறை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரசாங்கத் திணைக்களங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனத்தின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.
- இந்தப் பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) தமது சம்பளத்தின் 8% பங்களிப்புச் செய்தல் வேண்டும் மற்றும் நிறுவனம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) 3% பங்களிப்பு செய்யும்.
- அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக, நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
- அரச துறை, கூட்டுத்தாபனங்கள், நியதிகள் சட்ட சபைகள், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் தேசிய கல்வி நிறுவனத்தின் அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கல்வி நிறுவகம்.**